...ிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார் ...ா. இரான்செழியன், B. A. (Hons.)

தனி இதழ் அணா 1½
வெளிநாடு அணா 2

...ள் | சென்னை 6—12—47 சனிக்கிழமை | வீச்சு 17

...க்கைச் சித்திரம் :

...ானும் ஓர் விதவையா !

(கோ. திருஞானம்)

...ணசீலன்: என் அன்பே, ...தா பார், இந்த வெண் ...ா ஐந்து ஆண்டுகட்கு முன் ...நீயும் நானும் இதே நிலா ...றத்தில் இன்பமாக விளை ...னோம். அப்போது புத்தம் ...் மணமக்களாக இருந் ...ம். முகத்திலே புன்னகை ...் நிலாமுகத்தை மறைத்து ...மொழி பேசி நீ இன்பமூட்டி ... இன்றும் நம் இளமை ...ந்துவிடவில்லை. ஆனாலும்.... ...அறிந்திருக்க முடியாது. ...னை மணந்தபிறகு தான் ...மனிதத் தன்மை பெற் ...்: கட்டுக்கடங்காக் காளை ...நான திரிந்தபோது என்னை ...ழியிலே ஈர்த்துச் செல்பவர் ...ம் இருந்தன ரில்லை. என் ...க்கு நான் ஒரே குழந்தை ... இருந்தாலும் என் தந்தை ...த்துவைத்த நிறைந்த ...ருளும் என் கெட்ட ...தைக் குத்தான் துணை நின் ...வ தவிர, நல்லவர் நட்பு எனக்கு ஏற்படவில்லை. எனக்குக் குணசீலன் என்று பெயரிட்ட என் தந்தை இன்னும் சிறிது காலத்திற்கு உயிரோடிருந்தால், என் நடத்தையைக் கண்டு உள்ளம் உடைந்து தன்னை மிகுதியும் நொந்து கொண்டிருப்பார், கமலா. இருபத்தெட்டு வயதிற்குள் உடல் மெலிந்து சரமாரியாக ஒவ்வொரு நோயாலும் பிடிக்கப்பட்டு தொடர்ந்த துன்பத்தில் மூழ்கியிருக்கின்றேன. சில நாட்களாக நான் முன் செய்த கொலையின் நினைவுகள் என்னை வாட்டிக் கொண்டிருக்கின்றன.

கமலா: என்ன? கொலை புரிந்தீர்களா? தங்கள் உளநிலையில் ஏன் இந்தக் கலக்கம்?

கு: நீ நம்பமாட்டாய், கமலா நான் கொலையாளிதான். இவ்வுலகம் என்னை அறியாது. உனக்கும் வெளியில் சென்று உலகத்தோடு பழகும் வாய்ப்பும் இல்லை. அவசியமும் இல்லை. கொல்லைப் புறமே, நின் சிங்காரத் தோட்டம். ஏவலாளர் பணிபுரிய, அத்துடன் உன் மகன் மணிவாசகம் மடியில் தவழ, கவலையென்பதை அறியாது போனாய். அதோ மணிவாசகன் சிரிக்கின்றான் பார், கமலா.

க: உங்களைப் பார்த்துத்தான் சிரிக்கின்றான். எழுந்திருங்கள் பனி பெய்கின்றது. உள்ளே செல்வோம்.

கு: இதைக்கேள். உனக்கு வானளாவிய மாளிகை இருக்கின்றது-வெய்யில், மழை, பனி முதலியவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ள. பல்லாயிரக் கணக்கான ஏழைமக்கள் உழைத்துப் உண்ண உணவின்றிக் கந்தல் அணிந்து தங்குவதற்கு இடமும் இல்லாமல் அவதியுறும் நிலையை நீ எண்ணிப் பார்த்ததுண்டா?

க: ஏன்? நான் எல்லாவற்றையும் பத்திரிகைகளில படித்துக்கொண்டுதா னிருக்கின்றேன்.

கு: ஆம். நீ தான் படித்த பெண்ணாயிற்றே, இருக்கட்டும் இதோ அருகிலிருக்கின்ற இந்த குடிலுக்குள் சென்றிருக்கின்றாயா?

க: அங்கு ஒருநாள் சென்றேன். ஒரு 'குடுகுடுக்' கிழவி மாலை நேரத்தில் முறுக்கு சுட்டுக் கொண்டிருந்தாள். அதைக் கொண்டுதான வயிறு வளர்க்கின்றாளாம். காலை நேரத்தில் இட்டிலி வியாபாரமாம்.

கு: வேறு ஏதேனும் சொன்னாளா அந்தக் கிழவி?

க: அங்கே, சுவரில் ஒரு பெண்ணின் புகைப்படம் மாட்டியிருந்தது. "இது யார்" என்று கேட்டேன். கிழவி கண்களில் நீர் ததும்ப "என் மகள் தான். இறந்து விட்டாள்" என்று கூறி விம்மினாள்.

கு: இந்தப் பரிதாபத்திற்குரிய கதையைத்தான் நான் உன்னிடம் கூற வேண்டுமென்று எண்ணினேன். கமலா, அந்த வீட்டில் தொடக்கப்பள்ளி ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவர் மனைவிதான் அந்தக் கிழவி. அவர்களுக்கு ஒரே ஒரு பெண்மகவு. எனவே சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தார்கள். ஏழாம் வகுப்பு வரையில் படித்து முடித்தாள் அந்தப் பெண் பிறகு மங்கைப் பருவம் எய்தவே, அண்மையிலுள்ள கிராமத்தில் ஒரு நிலச்சுவான்தார் மகனுக்கு மணம் செய்து கொடுத்தார்கள். திருமணம் வழக்கம்போலவே சோதிடர் கணித்த சாதகம் ஒப்ப ஆன்றோர்களால் உறுதி செய்யப்பட்டு, நன்னாள் நல்லோரையில் பல்வகை வாத்தியங்கள் இனிது முழங்க, சிறப்பாகத்தான் நிறைவேறியது. பெண்ணுடைய கல்வியையும் அழகையும் கருதி ஏழை என்பதையும் பொருட்படுத்தவில்லை மிட்டாதார். பெண்ணின் தந்தை தன் மகளை இன்பப் பூங்காவில் துள்ளி விளையாட வைத்து விட்டதாக எண்ணி மகிழ்ந்தார். என்ன, கமலா, தெருவில் ஏதோ வாத்தியம் முழங்குகின்றதே?

க: அடுத்த தெரு வைர வியாபாரியின் மகனுக்கு மணமாம்; ஊர்வலம் வருகின்றது.

கு: பால் போலும் வெண்ணிலா....இந்த மின்விளக்கையெல்லாம் அணைத்துவிட்டு ஊர்வலம் நிகழ்த்தினால் மணமக்கள் மனம் பூரிப்பார், கமலா. பிரிந்துறையும் காதலர்க்கு இந் நிலாவொளி வெப்பமாக இருக்குமென்றால், கணவனை இழந்தாளொருத்தியின் நிலை எவ்விதமிருக்கும்? சிந்தித்துப் பார்.

க; இதென்ன அசந்தர்ப்பமான பேச்சு! தாங்கள் கூறி வந்த கதையைத் தொடர்ந்து முடியுங்கள்.

கு: அட, அசடே! சரி கதையை முடிக்கின்றேன். அந்த மிட்டாதாரின் மகன் சிறுவயது முதற்கொண்டே காசநோயால் துன்புற்று திருமணத்திற்குப் பின் இரண்டு ஆண்டுகளில் இறந்துவிட்டானாம்.

க: சாதகமெல்லாம் பொருந்தி இருந்ததென்று சொன்னீர்களே?

கு; ஏன் வீணாகப் பிதற்றுகின்றாய். சாதகத்தில் உண்மையிருந்தால், சாதகம் கணிக்கும் புரோகிதர் வம்சத்திலேயே பல விதவைகள் இருப்பார்களா?

க: அதற்கென்ன செய்வது. எல்லாம் விதிப்படிதானே நடக்கும்.

கு: விதியா! சாதகத்தில் கணிப்பதும் விதியைத்தானே!

க: அதெல்லாம் கிடக்கட்டும். அப்பெண்ணின் கதி பிறகு என்னவாயிற்று? அதைச் சொல்லுங்கள்.

கு: என்னென்று சொல்வது! அப்பெண் லலிதா தாய் வீட்டிற்குத் திரும்பிவிட்டாள். சுதந்திரம் வேண்டும் ஆண்களோடு சமவுரிமை வேண்டும் என்றெல்லாம் கூறுகிறார்களே. அதைப் பற்றி நீ சிந்தித்துப் பார்த்ததுண்டா?

க: சிந்தித்துப்பார்த்து என்னால் என்ன செய்ய முடியும்?

கு: ஏழைப்பெண் லலிதா! கணவன் இருந்தவரையில் சுக வாழ்வு. பின்னர் இருநூறு ரூபாய் உயிரை உடலோடு பொருத்திவைக்க! இந்த நிலையை எண்ணிப்பார் கமலா! போதாக்குறைக்கு "செவ்வாய் தோ[...] உடையவள். கணவனை வி[...] வில் விண்ணுலகனுப்பி [...] டாள்" என்ற வசைமொழி[...] யும் வம்புப்பேச்சில் மனம்[...] மும் ஊரார் கிளப்பிவிட்ட[...] கள் வீடுவந்த மகளைக்க[...] தந்தையாகிய ஆசிரியர் த[...] கட்டிய மாளிகை முடிவுபெ[...] முன்னர் இடிந்து வீழ்ந்ததெ[...] வருந்தினார். "வாழாவெட்[...] யாகி விட்டாளே தன் ம[...] என்பதை உணர்ந்த த[...] நாளடைவில் நோய்வாய்ப்ப[...] இயற்கையெய்தினார். ஒரு[...] மீது ஒருவர் ஆழ்ந்த அ[...] பூண்பதுவும் தவறாகத்தா[...] இருக்கின்றது! கமலா மணிவ[...] களைத் தூக்கித் தொட்டி[...] போடு. தூங்கட்டும்.

க: பெண்கள் எப்போது[...] 'பாபம்' செய்தவர்கள்தான்!

கு; 'பாவம்' 'புண்ணிய[...] என்பனவற்றை நம்பித் துன்[...] படலாமா? பண்டைத் தமி[...] பெண்கள் வீரத்திலும், அற[...] லும், கல்வியறிவிலும் மே[...] பட்டு விளங்கினார்களென்ப[...] நீ படித்திருப்பாயே. பெண்[...] தானே வீரர்களையும் அறி[...] களையும் உலகிற்கு அளிப்ப[...] கள். பெண் ஆணுக்கு அடி[...] யல்ல. கமலா, உனக்குத்த[...] வேண்டிய பொருள் இருக்கி[...] றதே. மாதர் சங்கங்க[...] அமைத்துப் பெண்களின் [...] தலைக்காகப் பாடுபட்டா[...] என்ன?

க. இருக்கட்டும். அந்[...] பெண்ணின் கதிதான் என்ன[...]

கு: உனக்கு முன்னொருக[...] சொல்லியுள்ளேன். தன் [...] மகன் குமரவேள் என்ற [...] வளர்த்து வந்தார் அந்த [...] என்று. அவன் கல்[...] படித்துக் கொண்டிருந்தா[...]

(11-ம் பக்கம் பார்[...]

ஆரம்பம் அடாணா! முடிவு முகாரி!

1

"இந்திய தேசீய காங்கிரஸ் ஒன்றுல் மட்டுமே பாட்டாளிகளின் வாழ்வு இன்பபுரிப் பயணம் தொடங்க முடியும்."

2

"காங்கிரஸில் சில முதலாளிகள் மடமடவென சேர்ந்துவருகிறுர்கள் என்றபோதிலும் அது இன்னமும் பாட்டாளிகளின் ஸ்தாபனமாகவே இருந்துவருகிறது. அந்த முதலாளிகளை நாம் மிக விரைவில் விரட்டிட முடியும்—விரட்டவே போகிறோம்."

3

"காங்கிரஸ், நாளுக்கு நாள் முதலாளிகளின் பக்கம் சாய்கிறது. இன்று நாம் அவர்களை காங்கிரசிலிருந்து விரட்டவேண்டும். இல்லையேல் நாம் காங்கிரசிலிருந்து வெளியேறிவிடவேண்டும்."

4

"மக்களின் குறைகளைக் களைந்திடிய காங்கிரஸ் தவறிவிட்டது. இனி நாம் காங்கிரசிலிருந்து வெளியேறி சர்க்காருக்கு எதிர்க் கட்சியாக இருந்து வேலை செய்வது தவிர வேறு வழியில்லை."

* * *

காங்கிரஸ் ஒன்றே இந்திய பாட்டாளிகளின் நல்வாழ்க்கை நிலையம் என்று தொடங்கிய பாசுரம் காங்கிரசை விட்டு வெளியேறுவது தவிர பாட்டாளிகளுக்கு இனி உய்யும் வழி வேறில்லை என்று முடிந்துவிட்டது.

"காங்கிரஸ், முதலாளிகளின் கோட்டை என்று சொல்கிறுர்களா? கிடக்கட்டும் அந்த வகுப்புவாதிகள், தேசத்துரோகிகள்! நாம் அவர்கள் குரல் கேளோம், பதுங்கி பதுங்கி வாழோம், தேசீய மன்றத்துக்கு மாறு கூறேம், காங்கிரஸ்க்காகவே நாம் பாடுபடுவோம்" என்று முழங்கிய வட்டாரம், "ஆமாமப்பா, மெய்தானப்பா, காங்கிரசில் பிர்லாக்களின் கைகள் பட்டதே சட்டமப்பா, இனி இங்கு இருப்பது ஆகாதப்பா, ஆர்ப்பாட்டக்காரர் அதை ஒப்பாரப்பா" என்று குழைவுமொழி கூறத் தொடங்கிவிட்டது.

காங்கிரசை எதிர்ப்பவர்கள் பாட்டாளிகளையே எதிர்ப்பவர்கள்! காங்கிரசை மறுப்பவர்கள் உழைப்பாளிக்கு உரிமை தர மறுப்பவர்கள்" என்று பேசிய அதே குரல், "காங்கிரஸ் சர்வாதிகார கட்சியாக மாறுதிருக்க வேண்டுமானுல், நாம் எதிர்க்கட்சியில் இருந்து, அதன் தவறுகளைத் திருத்தவே வேண்டும்" என்று புதுப்பேச்சு பேச நேர்ந்துவிட்டது.

ஆம்! இந்திய சோஷலிஸ்ட் சங்கீதம் அடாணாவில் ஆரம்பித்து முகாரியில் முடிந்துவிட்டது. இந்திய தேசிய காங்கிரசை ஏத்தி ஏத்தித் தொழுவோமே என்று தொடங்கிய பண், "அதை எதிர்ப்பதல்லாமல் வேறென் செய்வோம் பராபரமே" என்னும் சொற்களில்தான் வந்து நின்றிருக்கிறது.

ஆரம்பம் அடாணா! முடிவு முகாரி! ஆரம்பம் போற்றல்! முடிவு தூற்றல்! ஆரம்பம் களிப்பு—முடிவு துக்கம்—இதுதான் இன்றைய சோஷியலிஸ்டுகளின் நிலை.

சோஷியலிஸ்டுகள், காங்கிரசே இந்தியாவுக்கு நல் வழி வகுக்க வல்ல இயக்கம் என்று மனமார நம்பினர்கள்; மக்கள் மன்றத்தில் சிங்க ஏறுகள் என நிமிர்ந்து நின்று இந்த உண்மையை உலகறியக் கூறினர்கள்; பட்டாளம் பட்டாளமாக, பாட்டாளிகளை ஒன்று திரட்டி, ஐக்கிய முன்னணி அமைத்து தேசிய முகாமுக்கு அழைத்துச் சென்றுர்கள்; அழைத்துச் சென்றதுமட்டு மல்லாமல் தாங்களும் தங்கள் வாழ்க்கையை காங்கிரஸ் வளர்ச்சிக்கென்றே பரிபூரணமாக ஒப்படைத்துவிட்டார்கள். ஒளிந்திருந்தும், உரு மாறித் திரிந்தும், போலீஸ் வலைகளுக்குத் தப்பியும், சி. ஐ. டி. கண்களுக்கு மிஞ்சியும், பயங்கரப் புரட்சிகள் செய்தும், இன்னல் பல்லாயிரம் ஏற்றும், தேசிய இயக்கத்தைக் தம் கண்ணின் மணியெனக் காத்து வளர்த்தார்கள். ஆனுல் இன்றே, தம் உழைப்பு அத்தனையும் வீணை தைக் காண்கிறுர்கள். தாங்கள் சிந்திய இரத்தம், கொட்டிய வியர்வை, உகுத்த கண்ணீர் பட்ட பாடு, ஏற்ற துயரம் அவ்வளவும் முதலாளி வர்க்கத்தின் முற்போக்குக்கே பயன்படக் காண்கிறுர்கள். தாம் கட்டி வளர்த்த காங்கிரஸ், ஏழை அழுத கண்ணீரைத் துடைக்காமல், உழைப்பவர் உள்ளம் உடைபடுவதைக் கண்டு கண் கசியாமல், சர் சண்முகங்களையும் டாடா பிர்லா டால்மியாக்களையும் தட்டிக் கொடுத்துக்கொண்டு, அவர்களுடன் விருந்துண்டு களித்து கை குலுக்கிக்கொண்டு இருக்கக் காண்கிறுர்கள். நெஞ்சம் திடுக்கிடுகிறுர்கள். "சுதந்தரப் பயிரைக் கண்ணீர் விட்டே வளர்த்தோம் சர்வேசா கருகத் திருவுளமோ" என்று அவர்களுடைய அந்த உடைந்த உள்ளம்; வேதனை தோய்ந்த குரலில், மெள்ள மெள்ளக் கூறுகிறது. ஜெயப் பிரகாஷ் நாராயண் ஒரு புறம் வருந்துகிறுர் காங்கிரஸ் இந்த நிலைக்கு வந்ததே என்று டாக்டர் லோஹியா ஒரு புறம் கண்களில் நீர் கசியக் கேட்கிறுர். நாம் பட்ட பாடு இதற்குத்தானு என்று மூலைக்கு மூலை சோஷியலிஸ்ட் தலைவர்கள் தங்கள் தியாகமும் தீரமும் விழலுக்கிறைத்த நீரானது கண்டு நெஞ்சம் குமுறிக் குமுறிப் பேசுகின்றனர் இன்று.

ஆம்! இன்று! ஆனுல் நேற்றும் அதற்கு முந்திய நாளும், அதற்கும் முந்திய நாளும், அவர்கள் இன்று கூறிடும் இதே உண்மையை நாம் கூறினேம், காங்கிரஸ் பாசிச ஸ்தாபனம் என்பதை எடுத்துச் சொன்னேம். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்ய வேண்டுமாயின், வீணில் உண்டு களித்திருப்போருக்கு நிந்தனை கிடைக்க வேண்டுமாயின், உழைப்பவர் உள்ளம் களிப்புறவேண்டுமாயின், அவர்கள் காங்கிரஸ் போர்வையை விலக்கிக்கொண்டு, கதர் சட்டையை அகற்றிவிட்டு, வெளியே வந்து வேறு புரட்சி முகாம் அமைக்க வேண்டும் என்று சொன்னேம். ஆனுல் உண்மையை ஒரு பத்து ஆண்டுகட்கு முன்னுல் கூறியதற்காக நாம் பாராட்டப் பட்டோமா? அல்லவே! பழிச் சொல்தானே பரிசாகப் பெற்றேம்! இன்றைக்கு உண்மையை உணரும் இச் சமதர்மிகள் அன்றைக்கு நாம் உரைத்தபோதே உணர்ந்திருந்தால் எவ்வளவு விபரீதங்களைத் தடுத்திருக்கலாம்! ஆனுல் என் செய்வது, "உண்மை" எப்போதும் விரைவில் உணரப்படும் பொருள் அல்லவே!

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டேனா? அல்லது, "உம் தோள்கள், கண்ணாளா, என் நெஞ்சை வருத்துகின்றன" என்று அவள் சொன்னாளா? அதுவுமில்லை. எங்கள் வாய் பேசவில்லை. மொழி, எங்கள் கருத்துக்களைக் கொட்டிக் குவித்துப் பரிமாறவில்லை. பொருளற்ற சொற்கள் இருவர்க்குமிடையே "தூது" போகவில்லை. ஆனால் எங்கள் உள்ளங்கள் பேசின; சொற்கள் தெரிவிக்க முடியாதவைகளை—சொற்பதம் கடந்த பேரின்பச் சேதிகளை — பேச்சு மொழிகளின் வரையறைக்கும் அதிகாரத்திற்கும் அப்பாற்பட்ட இடத்தில் இருந்து கொண்டு அவை பேசின.

3

"பேயும் உறங்கும்" நள்ளிரவு.......முழு நிலவு தன் குளிர்ந்த ஒளிச் சுடர்களை எங்கணும் பாய்ச்சிக் கொண்டிருந்தான்......கண்ணுக் கெட்டிய தூரம் வரை அமைதி......நகர மக்கள் அனைவருமே — நகர மக்களென்ன, நகரமேகூட "முழுமோன நித்திரையில்" இருப்பதாகத்தான் தென்பட்டது மேலொட்டாகப் பார்த்தபோது. ஆனால்......

ஆனால் எவ்வளவு பேர் படுக்கையில் படுத்தும் உறக்கம் வராமல், மனதில் நிகழும் பல்வேறு போராட்டங்களின் இடையே சிக்குண்டு சிதைவுற்றுக் கிடந்தனரோ! எத்தனை பேர் நாளை வாழ்வுக்கு என் செய்வோம் என்று ஏக்கமுற்று வாடி வதங்கிய தம் உள்ளத்தை, "மனமே இரு! பொறு! ஏன் அச்சம்? மரம் வைத்த நாயன் தண்ணீர் ஊற்றாமல் போவானா!" என்ற வேதாந்த உபதேசத்தின் மூலம் திருப்திபடுத்தப் பார்த்தனரோ?

அந்த இரவில், கொழுத்த பணக்காரர் சிலர் எந்த நாடக நடிகையைப் பிடித்தால் தமக்கும் கௌரவம்; மற்ற நண்பர்களும் தம்மைக் கண்டு பொறாமையால் வெதும்புவார்கள்; தம் உடற் பசியையும் தீர்த்துக் கொள்ளலாம் என்று யோசித்துக் கொண்டிருப்பார்கள்.

* * *

ஏழை வீட்டுப் பெண்—அவள் செய்த பூர்வஜன்ம பாவத்தால் ஏழையாய்ப் பிறந்திருப்பாள். வயதடைந்து பல வருடங்களாயிருக்கும் அம்மா எவ்வளவு தடுத்தும் அடக்க முடியாமல்—உல்லாசமாக உலாவ மாடி வீடில்லாத குறையால்—ஜன்னல் வழியாக நின்று—போவோர் வருவோரையெல்லாம் கண்கொட்டாமல் பார்த்து நின்றிருப்பாள். அதில் பழக்கமாக அவ் வழியாக தினம் போகும் சில இளைஞர்களில் யாரேனும் ஒரு காளைமீது அவள் ஆசை வைத்திருப்பாள். அவனுக்கும், அவள் கண்களில் ததும்பும் காதல் தணலைக் கண்டு மயக்கம் ஏற்பட்டிருக்கும். ஆனால் அவளை வதைக்கும் வறுமையைக் கண்டு வேறு பக்கமாக திரும்பிக் கொண்டே போயிருப்பான்.

அது அவள் கண்முன்பு நின்று நர்த்தனம் ஆடிக்கொண்டே உறக்கம் வராமல் தடுத்துக்கொண்டிருக்கும்.

* * *

வேறொருத்தி— இளம் விதவை—நில வொளியில் உல்லாசமாக உலவி விட்டு வந்த தன் அண்ணனையும் அவன் மனைவியையும் கண்டு பெருமூச்செறிந்து இளமையிலேயே முதுமைக் கோலத்தைத் தன்மீது சுமத்திவிட்ட பாழும் சமூகத்தை நொந்துகொண்டு கண்களில் நீர் முத்து முத்தா அரும்ப சந்திரனை நோக்குவா

இன்னொருவன்—காலையி வண்டி யிழுக்கும்போது தவ காலையோ அல்லது கையையோ ஒடித்துக்கொண்டிருப்பான் அவன் சிந்தனைகள் எல்லாம் பொழுது விடிந்தால், எப்படி தன்னால் வேலை செய்ய முடியும் செய்யவில்லையானால் தன் பெண்டாட்டி பிள்ளை...?

இப்படி அவன் கற்பனைகள் ஓடிக்கொண்டிருக்கும்.

ஆனால் வெளிப் பார்வைக்கு நகரம் அமைதியில் ஆழ்ந்திருப் பது போன்றுதான் காட்சியளி தது.

இப்படி மற்றவைகளைப்பற் எண்ணிக் கொண்டேயிருந் எனக்கு என்னைப் பற்றிய சி தனையும் வாராமற்போகவில்லை.

(தொடரும்)

One side of the page is darker

உண்மை உலவுகிறது—22 ஆண்டுகளுக்குப்பின்!

(10-ல பக்கத் தொடர்ச்சி)

20-11-47ல் வெளியான சென்னை காங்கிரஸ் அரசியலார் அறிக்கை இது:—

இதுவரையில் உள்ள வகுப்பு விகிதாசார உத்தரவுப்படி காலியா கிற ஒவ்வொரு 12 ஸ்தானங்களுக்கும் பிராமணரல்லாதார் 5, பிராமணர் 2. முகமதியர் 2, ஆங்கிலோ இந்தியர், கிறிஸ்தவர் 2, ஹரிஜன் 1 என்ற முறையில் பதவிகள் வழங்கப்படும்.

ஹரிஜனங்களுக்குப் போதுமான படியும், பிராமணரல்லாதாரில் பிற்போக்கானவர்க்கும், பதவிகள் கிடைப்பதில்லை என்பதனால் சர்க்கார் இந்த வகுப்புவாரி உத்தரவைப் பின்கண்டவாறு மாற்றுகிறது. இனி காலியாகிற ஒவ்வொரு 14 ஸ்தானங்களுக்கும் கீழ்க்கண்ட முறைப்படி ஆளெடுக்கப்படும்.

1. பிராமணரல்லாதார்
2. ஹரிஜன்
3. பிற்போக்கு பிராமணரல்லாதார்
4. பிராமணரல்லாதார்
5. பிராமணர்
6. பிராமணரல்லாதார்
7. முசல்மான்
8. பிராமணரல்லாதார்
9. ஆங்கிலோ இந்தியர், கிறிஸ்தவர்
10. பிராமணரல்லாதார்
11. ஹரிஜன்
12. பிராமணரல்லாதார்
13. பிராமணர்
14. பிற்போக்கு பிராமணரல்லாதார்.

இது உத்தரவு மத்திய சர்க்காரின் விகிதாசார ஏற்பாட்டுக்கும், ஜனத்தொகைக்கும் ஏற்றதாகப் பொதுவாக இருக்கிறதென்று தெரிவிக்கப்படுகிறது.''

* * *

காங்கிரஸ் சர்க்கார் பழைய விகிதாசாரத்தை மாற்றி புதிய விகிதாசாரத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறது. அதாவது பழைய விகிதாசாரம் தவறு என்று எண்ணிற்றே தவிர காங்கிரஸ் சர்க்கார், விகிதாச்சாரப்படி பதவிகளை வழங்கும் முறையே தவறு என்று எண்ணவில்லை. வழங்கும் அளவு தவறு என்றதே தவிர வழங்கும் முறை தவறு என்று கூறவில்லை. ஆகவே வழங்கும் முறையை—வகுப்புகளின் எண்ணிக்கைக்கேற்பவே பதவிகளை வழங்கவேண்டுமென்ற திட்டத்தை—வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் என்ற தத்துவத்தை அது ஒப்புக் கொண்டது என்று பொருள்.

காங்கிரஸ் சர்க்கார் இன்று அந்தந்த வகுப்புகளுக்குத்தந்துள்ள உரிமைகளின் அளவு சரியா? சரியில்லை என்றே நாம் கருதுகிறோம்—ஆனால் அது வேறு பிரச்சினை.

அந்தந்த வகுப்புகளின் எண்ணிக்கைக் கேற்ப உத்தியோகங்களின் எண்ணிக்கை வகுக்கப் பட்டிருக்கிறதா?—இல்லை. பார்ப்பனர்கட்கு உரியதைவிட ஐந்து மடங்கு அதிகமாகவும், திராவிடர் ஆதித் திராவிடர் முஸ்லிம்கள் ஆகியோர்க்கு உரியதினும் பார்க்க மிகக் குறைவாகவும் விகிதாசாரம் உள்ளது. ஆனால் அதுவும் வேறு பிரச்சினை.

ஆனால், காங்கிரஸ் சர்க்கார்' வகுப்புகளின் எண்ணிக்கைக்கேற்பவே பதவிகளை வழங்கவேண்டும் என்ற தத்துவத்தை—1925ல் பெரியார், காங்கிரசை ஒப்புக் கொள்ளுமாறு வலியுறுத்திய, ஆனால் காங்கிரஸ் ஒப்புக் கொள்ள மறுத்த தத்துவத்தை—இன்று, 1947ல், மனமுவந்து ஒப்புக் கொள்வது கண்டு நாம் மிக மகிழ்கிறோம்.

பெரியார் 1925ல், 1947 ஐக் கண்டார். காங்கிரஸ் சர்க்கார் 1947ல் 1925 ஐக் காண்கிறது. ஆனால் இன்றேனும் காண்கிறதே அ[illegible] வரை மகிழ்ச்சி நமக்கு.

சென்னை சர்க்கார் அறிக்கையில் இங்கே மட்டுமல்ல, மத்திய சர்க்காரிலும் இதுபோன்ற விகிதாசார ஏற்பாடு இருக்கிறது என்கிற அந்தப் பகுதி உண்மையிலேயே அனைவரும் கவனித்தற்குரியது. "சின்னத் தலைகள்" ("கல்கி" யின் பாஷை!) மட்டுமல்ல, பெரிய தலை களும் கூட வகுப்புவாரி ஏற்பாட்டினையே ஒப்புகின்றன என்பது நம் கவனத்திற்குரியது தானே!

பெரியார், 1925ல் சொன்னதை இன்று சாதித்துவிட்டார். வகுப்புவாரித் திட்டம் ஒன்று தவிர வகுப்புச் சிக்கல் தீர மருந்தில்லை என்பதை, காங்கிரஸ் நடைமுறையிலேயே ஏற்கும் "அந்த நாளை"க் கண்டு விட்டார். பார்ப்பனீயம் அழியும் நாளையே இன்னும் அவர் காணவில்லை. அதையும் காண்பார் விரைவில் என்பதில் ஏது ஐயம்?

காஞ்சி மாநாட்டிலிருந்து வெளியேறிய விநாடி முதல் இன்று வரை அந்த மாவீரர் பார்ப்பனீயத்தின் கொடுமைகளை மக்களுக்கு விளக்கியே வந்திருக்கிறார். ஆரியத்தின் ஆணவத்தை — வர்ணாசிரம ஏற்பாட்டின் அநீதியை தமிழ் வீரர் கூட்டம் நன்குணர்ந்து வீறு கொண்டே எழுந்து வீரப் போர் தொடுக்கச் செய்துவிட்டார். பார்ப்பனீயம் என்னும் மாறு பெயர் கொண்ட பழமையை அழிக்க வேண்டும், புரட்சியை எழுப்ப வேண்டும் என்ற எண்ணத்தை எத்தனையோ ஆயிரமாயிரம் இளங்காளைகளின் உள்ளத்தில் தூவி விட்டார். பெரியதோர் பட்டாளத்தை—அறிவும் திறமும் சிந்தனை வளமும் படைத்த தமிழர் சேனையை உருவாக்கிவிட்டார். "வாழ்க வாழ்கவே! வளமார் எமது திராவிட நாடு வாழ்க வாழ்கவே!" என்னும் பண்பாடச் செய்துவிட்டார் சிறுத்தையின் குகையில் சிறு நரிகளின் வாசமா என்னும் கேள்வி எங்கணும் எழச் செய்துவிட்டார். புதிய தமிழகம் இனி உருவாகவேண்டும் — அது ஒன்றுதான் பாக்கி — அதற்கான பாதை வகுக்கும் பணியைச் செம்மையுறச் செய்து முடித்துவிட்டார். புதிய தமிழகம் உருவாக வேண்டுமானால் பழைய பார்ப்பனீயம் அழிய வேண்டும். அது கல்லறை புகும் நாள் எந்நாளோ, அந்நாளே புரட்சித் தமிழகம் பூக்கும் நாள். அந்த நாள் என்று வரும்? ஆம், புரட்சித் தமிழகம் பூக்கும் அந்த நாள் என்று வரும்?

—

போர்வாள்

6—12—47 சனிக்கிழமை

அந்த நாள் என்று வரும்?

காந்தியார்: சந்தானம் ஏன் ராஜீனமா செய்தார்?

ஈ. வெ. ரா.: கதர் போர்டின் காரியதரிசி என்ற முறையில் அவர் கதர் போர்டின் உத்தியோகங்களையெல்லாம் பார்ப்பனருக்கே கொடுத்து வந்தார். நான் அதன் தலைவன் என்ற முறையில் அப்படிச் செய்வது நீதியல்ல என்றேன். அதை திருப்தியின்றி அவர் விலகினார்.

காந்தியார்: இது நம்ம சி. ஆர். க்குத் தெரியாதா?

ஈ. வெ. ரா.: இந்த விஷயத்தில் அவர்கள் எல்லோரும் (பிராமணர்கள் எல்லோரும்) ஒன்றுதான்.

காந்தியார்: அப்படியானால் உங்களுக்கு சி. ஆர். மீதுகூட நம்பிக்கை இல்லையா?

ஈ. வெ. ரா.: ஆம், பார்ப்பனர்களுக்கு அவரிடம் உள்ள அளவு நம்பிக்கை எனக்கு இல்லை.

காந்தியார்: அப்படியானால் பார்ப்பனரிடத்திலேயே உமக்கு நம்பிக்கை இல்லையா?

ஈ. வெ. ரா.: இந்த விஷயத்தில் நம்பிக்கையே உண்டாவதில்லையே!

காந்தியார்: அப்படியானால் உலகத்திலேயே நல்ல பார்ப்பனர் இல்லை என்பது உமது கருத்தா?

ஈ. வெ. ரா.: யாரும் என் கண்ணுக்குத் தென்படவில்லையே, நான் என்ன செய்யட்டும்?

காந்தியார்: அப்படிச் சொல்லாதீர்கள். நான் ஒரு நல்ல பார்ப்பனரைக் கண்டிருக்கிறேன்.

ஈ. வெ. ரா.: நல்ல பார்ப்பனரா! யார் அவர்........

காந்தியார்: கோபால கிருஷ்ண கோகலே. யாராவது அவரைப் பிராமணர் என்று கூப்பிட்டாலும், பிராமணர் என்பதற்காக மரியாதை செய்தாலும்கூட ஆட்சேபிப்பார். மிகவும் நல்லவர்.

ஈ. வெ. ரா.: மகாத்மா கண்ணுக்கே ஒரே ஒரு யோக்கியமான பிராமணர் தென்பட்டிருக்கும் போது என்போன்ற சாமானியர்கள் கண்ணுக்கு யோக்கியமான பிராமணர்கள் எப்படித் தென்பட முடியும்?

காந்தியார்: (வேடிக்கையாகச் சிரித்துவிட்டு) அதிருக்கட்டும்; சந்தானம் காரியதரிசி வேலை பார்ப்பதில் உமக்கு ஆட்சேபனை உண்டா?

ஈ வெ. ரா.: நன்றாய்ப் பார்க்கட்டும். ஆட்சேபணையே கிடையாது. ஆனால் பிராமணரல்லாதார்க்கு 100 க்கு 50 பங்காவது தரவேண்டும்.

சங்கர்லால் பாங்கர்: (உரையாடலின்போது கூட இருந்தவர்):—நூற்றுக்கு 50 போதுமா! அதுகூடவா தரவில்லை?

ஈ. வெ. ரா.:—ஆம்.

பாங்கர்: இது என்ன அநியாயம்! நூற்றுக்கு 50 போதும் என்கிறீர்!

காந்தியார்: நான் ஒருபோதும் சம்மதியேன். நூற்றுக்கு 90 கொடுக்க வேண்டும்.

ஈ. வெ. ரா: 100-க்கு 50 கொடுக்க ஒவ்வாதவர்கள் நூற்றுக்கு 90 கொடுப்பதெப்படி?

காந்தியார்: [சந்தானத்தைப் பார்த்து] பார்ப்பனரல்லாதார்க்கு உத்தியோகம் கொடுக்க உமக்கு ஆட்சேபனை இல்லையே!

சந்தானம்: (மிகத் தந்திரமாக): இல்லை, ஆனால் அவர்கள் யாரும் வருவதில்லையே!

காந்தியார்: என்ன நாயக்கர்ஜி! யாரும் வருவதில்லை என்கிறார்!

ஈ. வெ ரா.: அது சரியல்ல, வேலை கொடுக்கவேண்டும் முதலில், பிறகு மரியாதையாய் நடத்தவேண்டும். அப்பொழுது வேண்டிய பேர் வருவர்.

காந்தியார்: அப்படியானால் இனி உத்தியோக நியமனத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்.

சி. ஆர்.: (சி. இராசகோபாலாச்சாரியார், தற்போதைய வங்காள கவர்னர்):—அது முடியாது. யார் வேலை வாங்குகிறார்களோ அவர்கள்தான் வேலைக்காரரை நியமிக்கவேண்டும்.

காந்தியார்: (சிரித்துக்கொண்டே) நாயக்கர் சொல்வதில் உண்மை இருக்கும்போல் தன் தோன்றுகிறது. நான் காங்கிரஸ் பிரசிடெண்ட். ஜவகர்லால் காரியதரிசி. நான் நியமித்

1924-ல் ஆரியத்தின் திருவிளையாடல்!

க்கொண்டு ஜவகர்லால்
வாங்க முடியாதா ?

: வகுப்புப் பிரிவினை
ம் போதுமா? வேலை
கவேண்டாமா? தகுதி
ம் திறமையையும்
க வேண்டாமா ?

: நாய்க்கர்ஜீ அதையும்
துக் கொள்வார். அப்
பார்ப்பனரல்லாதாரை
ப்பதன் மூலம் கொஞ்
வலை கெட்டுப் போனு
பாதகமில்லை. இரண்டு
ங்களும் நடக்க வேண்
தான். கதர் விஷயம்
டி முக்கியமோ. அப்படி,
பு அதிருப்தி நீங்க
ரவதும் ...க்கியமே.
யோக நியமனம் நாய்க்
கையிலேயே இருக்கட்

* *

யார், ஆச்சாரியார், சங்
பாங்கர், சந்தானம்,
ஆகிய ஐவர் 1924-ல்
ம் காங்கிரசின்போது
இருந்து பேசிய உரை
இது; கற்பனை அல்ல

தமிழ்நாடு கதர் போர்
தலைவர் ஸ்ரீமான் இராம
க்கர் (தமிழ்நாடு பெரி
ன்று அழைத்த விதம்
அதன் செயலாளர் சந்
என்னும் ஓர் ஆரியர்.
வேண்டும் என்பதற்
மிழ்நாடு முழுவதும் பம்
ல் சுழன்று சுழன்று
ணிபாற்றி வந்தார் பெரி
தர் மூட்டைகள் தோ
ராட்டை கையில்;
நாட்டு ஆடைகளை
தாதுக்க வேண்டுமென்
ப் பிரசாரம் பேச்சில்;
ம் கதர் வளர்ச்சியைப்
பாத சிந்தனை உள்ளத்

தில்; எந்தெந்த ஜில்லாவில் கதர் "சப்ளை" போதாது, எங்கெங்கே பிரசாரம் குறைவு, எந்த வட்டாரத்தில் கதர்பக்தி கொஞ்சம், கதரைத் தீவிரமாகப் பரப்புதற்கு என்ன வழி என்பனபோன்ற பிரச்சினைகளிலேயே நினைப்பு, நாள் முழுவதும்—இப்படிப்பட்டவர்தான் பெரியார் இராமசாமி, 1924ல்.

கதர் ஒரு மூட நம்பிக்கை என்று பிரசாரம் செய்தார் பெரியார்; விஞ்ஞான காலத்தில் காட்டுமிராண்டுக் கதர் ஏன் என்று அஞ்சாது கேட்டார்; மக்கள் முன்னேற்றத்திற்கு அது முட்டுக்கட்டை என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினார்—ஆனால் இது 1927ல்.

கதர் ஓங்கவேண்டும் என்பதற்காகத் தென்னாட்டில் மகத்தான பணி புரிந்துவந்தார் பெரியார் 1925 வரை.

அந்தக் காலத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சிதான் மேலே குறிப்பிட்டுள்ள உரையாடல்.

கதர் போர்ட், தென்னாட்டில் கதர் நிர்வாகம் பற்றிய அலுவல்களைக் கண்காணிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பு. அதன் செயலாளராய் இருந்த ஸ்ரீமான் சந்தானம் என்பவர்—"பிரமன் முகத்துதித்த" வகுப்பினர்—அந்த நிலையத்தின் அலுவல்கள் அத்தனைக்கும் ஆரியரையே நியமித்தார் வரிசை வரிசையாக. கண்டார் பெரியார். ஏதோ தற்செயலாக, நியமிக்கப் படுபவர்கள் அனைவரும் ஆரியராக உள்ளனர்போலும் என்றெண்ணினார் முதலில். பிறகு அதுவே நித்திய நிகழ்ச்சியாக இருப்பதைக் கண்டதும் கொதித்தெழுந்து கேட்டார், "என்ன சந்தானம், ஏன் இப்படி" என்று. தக்க பிராமணரல்லாதார் கிடைக்கவில்லை—கிடைக்கும் பிராமணரல்லாதார்க்கோ தகுதியும் திறமையுமில்லை என்று விடை கூறினார் சந்தானம். பெரியார் நம்பவில்லை இதனை. அலசிப் பார்த்தார் உண்மைகளை. உத்தியோக நியமனங்களை ஆராய்ந்து பார்த்தார். ஆரியர்களே அடுக்கடுக்காக, வரிசை வரிசையாக, வேண்டுமென்றே, நெஞ்சுத் துணிவுடன் நியமிக்கப்படுகின்றனர் என்பதை உணர்ந்தார். ஓகோ! அந்த ஜஸ்டிசுகள் சொல்வது மெய்தான் போலிருக்கிறது என்றெண்ணினார். எண்ணியது மட்டுமா, இந்தப் போக்கை இனி நீர் வளரவிடக் கூடாது—பிராமணர்களையே வரிசை வரிசையாக நியமிக்கக் கூடாது என்று கட்டளையிட்டார் செயலாளர் சந்தானத்திற்கு, தான் தலைவர் என்ற முறையில். சந்தானம் உடனே காரியதரிசி பதவியை ராஜினாமா செய்தார். வழக்கு காந்தியாரிடம் சென்றது—விசாரணைக்கு! அப்போதுதான் காந்தியார் "நாய்க்கர்ஜீ"யை (பெரியாரைக் காந்தியார் அப்படித்தான் குறிப்பிட்டு வந்தார் அந்த நாளில்) அழைத்து ஏன் இந்த சிக்கலென்று கேட்டார். அதற்குப் பெரியார் கொடுத்த பதில், காந்தியார் அளித்த "தீர்ப்பு", ஆச்சாரியார் செய்த வியாக்யானம், உண்மை நிலையைக் கண்டு சங்கர்லால் பாங்கர் திடுக்கிட்டது இவை அத்தனையையும் உள்ளடக்கியதுதான் இக்கட்டுரைத் துவக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ள உரையாடல்.

தகுதியும் திறமையும் ஒரு கூட்டத்தார்க்கு மட்டுமே உரிய சொந்த சொத்துகள் என்று இன்று கூறப்படுவதுபோலத்தான் அன்றும் கூறப்பட்டது.

பார்ப்பனீயத்தின் சலசலப்பு: பெரியார் உள்ளத்தில் சிந்தனை

கூறப்பட்டது என்றால் சாதா
ரண மனிதர்களால் அல்ல—
அன்பர் ஆச்சாரியார் போன்ற
மதிப்பு மிக்க தேசியத் தலைவர்க
ளால்! தகுதியையும் திறமையை
யும் காட்டிக் காட்டி ஆரியம்
திராவிடத்தை ஏய்த்த கதை புதி
தல்ல—பழையது; மிகப் பழை
யது. "தம் இனததவரே அறி
வின் திருவுடையார்; பிறரெல்
லாம் அத்துணை கூர்த்த மதி
அமையாதார்" என்று ஆரியர்
நெஞ்சு நிமிர்ந்து சொல்லி வரு
கின்றனர் இன்று நேற்றிலிருந்
தல்ல. பலப்பல ஆண்டுகளாக,
ஒரு துறையில் இரு துறையில்
அல்ல. எல்லாத் துறைகளிலும்.
கதர் போர்ட் நிர்வாகம் இந்த
விபரீத வாதத்திற்கு இரையான
பரிதாப நிகழ்ச்சிகளில் ஒன்று.
பெரியாரின் உள்ளத்தை ஒரு
குலுக்கு குலுக்கிவிட்டது இந்த
நிகழ்ச்சி. அதுவரையில் ஆரியம்
வேறு திராவிடம் வேறு என்று
பிரித்துப் பார்க்க ஒவ்வாத பெரி
யாரை — பிராமணர்களென்றும்
பிராமணரல்லாதார் என்றும்
உள்ள பாகுபாடுகளைத் தன்
உள்ளமென்னும் உலகத்தில்
உலவா வண்ணம் துரத்தியடித்த
பெரியாரை—இந்தியாவைச் சுர
ண்டிவந்த வெள்ளை ஏகாதிபத்
தியத்தை ஒழித்துக் கட்டுவதி
லேயே தன் உள்ளம், உரை,
செயல் அத்தனையையும் பறி
கொடுத்துவிட்ட பெரியாரை—
என்ன இருந்தாலுமே இந்தப்
பேத புத்தி ஆகுமோ என்று
ஜஸ்டிசுகளை நோக்கி கேலிக்
கவிதை பாடிவந்த பெரியாரை
முதன் முதல் சிந்திக்க வைத்தது
இந்தக் கதர்போர்ட் நிகழ்ச்சி.

"சந்தானத்திற்கு ஆரிய
உணர்ச்சியா! நான் உள்ளன்
போடு நேசித்துவந்த என்னரு
மை நண்பர் இராசகோபாலாச்
சாரியார் உள்ளத்திலும் பிராம
ணீய உணர்ச்சி இத்துணை ஆழ
மாகப் பதிந்து விட்டிருக்கிறதா!
ஆரியம் உண்மையிலேயே இவ்
வளவு சூழ்ச்சியும் கரவும் வஞ்ச
மும் நச்சுத் தன்மையும் நிறைந்
ததா! ஒரு குலத்துக் கொரு
நீதி என்றுரைக்கும் மனு நீதி
இன்னும் மாயவில்லையா! காங்கி
ரசிலும் இந்த அநீதியா! "எல்
லாரும் ஓர் குலம்; எல்லாரும்
ஓர் இனம்; எல்லாரும் ஓர்
நிறை; எல்லாரும் இந் நாட்டு
மன்னர்" என்று கவி பாடும்
கலைவாணர்களும், அதைக்காட்டி
உரையாடும் நாவாணர்களும்
நனிநிறைந்த தேசிய இயக்கத்தி
லும் இது இருக்கிறதா!"—
பெரியார் இதுபோல எண்ணலா
னார், கதர்போர்ட் பிராமண
போர்ட் என உருமாறிய விந்தை
கண்டு. முதன்முதலாக அவரு
டைய உள்ளத்தில், பிராமணர்
—அல்லாதார் என்ற இரு சொற்
களுக்கும் நடுவே உள்ள இடை
வெளி, மிகப் பயங்கரமான, மிக
மிக ஆழமான, பலப்பல நூற
ாண்டுகளாகக் கொஞ்சமும்
குறையாது உள்ள இடைவெளி
யின் சாயல் படர்ந்தது—முத
லில் இலேசாக; பிறகு கொஞ்
சம் அழுத்தமாக; பிறகு மேலும்
மேலும் அழுத்தமாக.

* * *

'மகரிஷி' வ. வெ. சு. ஐயர் எல்
லோருடைய மதிப்பையும் பாரா
ட்டுதலையும் பெற்றவர். சீமை
யில் வெள்ளைக்காரர்கட்கு எதி
ராகப் பயங்கரப் புரட்சி செய்யத்
திட்டமிட்டுவந்த "வீர
சவர்க்கா"ருக்கு உற்ற துணை
வராகவும் உரிய நண்பராகவும்
இருந்தவர். கலை பல பயின்ற
வர்; திருக்குறள் உணர்ந்தவர்;
அறிஞர் விவேகி வீரர் தீரர் என
றெல்லாம் புகழுரைகள் சூட்
டப்பட்டவர். அப்படிப்
வர் திருநெல்வேலி மாவ
ததைச் சேர்ந்த சேரமாதே
பரத்துவாச ஆசிரமம் என்ற
ரில் "தேச பக்தர்க
தேசிய வீரர்களையும் தய
தற்கு" என்பதாகக் கா
காட்டி ஒரு குருகுலம் அ
கிறார் என்ற சேதி
போது தமிழ்நாட்டுக் காங்
துள்ளிக் குதித்தது. ம
யின் வீரம், தியாகம்,
நாட்டில் வாழ்ந்ததால்
அநுபவம், ஆழ்ந்த
பயிற்சி, ஆங்கில அறிவு, ப
ரப் புரட்சியில் ஏற்பட்ட
கம் இத்தனையும் குருகுல
எத்துணை வளம்படுத்தும்
பதை எண்ணி எண்ணி
வட்டாரம் களிப்புக் க
குதித்துக் குதித்துக் க
டிற்று. அவர் உதவித்
வேண்டுமென்று கேட்ட
தமிழ் மாகாண காங்
10,00. ரூபா நன்கொடை
தாக உடனே பெரு மகி
யுடன் ஒப்புக்கொண்டது.

அப்போது தமிழ் மா
காங்கிரசிற்கு இரண்டு க
காரியதரிசிகள், ஒருவர் பெரி
மற்றவர் கே. எஸ். சு
மணிய அய்யர் என்பவர்.
யாரின் பணி 'செக்'கில் கை
ழுத் திடுவது. பிற கடித
ஆதாரங்கள் முதலியவற்
கண்காணிக்கும் பொறு
மற்ற செயலாளருக்கு. வ. வே
ஐயர், மாகாண காங்கிரஸ்
மானித்தபடி என் குருகுல
குத் தரவேண்டிய நன்கொ
யைத் தாரும் என்று பெ
ரிடம் கேட்டபோது, பெ
"தாராளமாகத் தருகி
அதற்கென்ன? நீங்க
குலம் எப்போது ஆரம்
போகிறீர்கள்? அத

குருகுலப் போராட்டம் மூட்டிவிட்ட தீ!

திட்டங்கள், நடைமுறை கள் முதலியவற்றைக் டு வாரும்; அவற்றைப் செய்துகொண்டு பணம் றேன்'' என்று சொன ஆவர் சரி என்று சொல்லி இன்னொரு செயலாள சுப்பிரமணிய அய்யரிடம் று, பெரியாருக்குத் தெரி ரூபா 5000க்கு 'செக்' க் கொண்டு போய்விட்

ற்கு இடையில் வ.வே.சு. குருகுலம் துவக்கப் விட்டது. துவக்கிய சில ளுக்குள் அங்கு பிராம பிராமணரல்லாதார் வேற் மிகவும் பாராட்டப்படுவ தமிழ்நாடு முழுவதும் சேதி காட்டுத் தீப் போல று. தமிழகம் முழுவதும் பேச்சு. அரசியல் உணர் யார் அனைவர் உரையாட குருகுல வேற்றுமை பற்றிய கருத்துப் பரிமா எங்கும் எவரும் இதைப் ய சிந்திக்கவும் பேசவும் வும் முனைந்தனர்.

நாள் ஓமந்தூர் இராம ரெட்டியார் (ஆமாம்! இப் சென்னை மாகாண முத ச்சராய் உள்ளவர்தான்) யாரைக் கூப்பிட்டு, பரத் குருகுலததில் பயின்றால் பண்பாடும், அறிவு வளர் ம், சகோதர நேயமும், வேற்றுமை யற்ற பரந்த மும் எற்படும் என்று தன் மகனை அங்குப் பயி பொருட்டுத் தான் அனுப்பி யும், சில வாரங்கள் சென் அவன் தன்னை ஒரு பிரா ல்லாதவன் என்ற கார காக அங்கு இழிவாகக் பிராமணப் பிள்ளைகள் இடத்தில் இருக்க வைத்து உணவு கொடுத்ததாகத் தன்னிடம் தெரிவித்ததையும் விளக்கமாக எடுத்துச் சொல்லி, இந்த அநியாயத்திற்கு நாம் ஒரு பரிகாரம் தேட வேண்டாமா என்று மனம் வருந்திக் கேட்டார்.

மகரிஷி என்றும், சிறந்த அறிஞர் என்றும், கலைஞர், தியாகி, புரட்சி வீரர் என்றும், அஞ்சாமையின் சின்னம் என்றுமெல்லாம் போற்றப்பட்டுவந்த வ. வே. சு. இந்த வேற்றுமையைப் பாராட்டுவதில் முனைந்து நிற்கிறார் என்று அறிந்தபோது பெரியார் திடுக்கிட்டுப்போய் விட்டார். அவரைப் போலவே, காங்கிரசில், அதுபோது, இரவு பகல் எனப் பாராது, ஓய்வு ஒழிவு என்பது கருதாது, அலைச்சல் திரிச்சல் என்பன அறியாது, சுழலும் சூறாவளி என நாடெங்கும் சுழன்று, சுழன்ற நாட்டுப் பணியாற்றிவந்த திரு. வி. கலியாணசுந்தரனாரும் டாக்டர் வரதராஜுலு நாயுடுவும் நெஞ்சம் துணுக்குற்றனர். **நாயுடு—நாயக்கர்—முதலியார்** என்று தமிழகத்தால் செல்லப் பெயரிட்டு அழைக்கப்பட்டு வந்த இம் மூவரும் குருகுல சம்பவத்தால் பாறையில் மோதிய மரக் கலமென மனங் கலங்கிப் போயினர். காங்கிரசுக்கு வெளியே பெருத்த ஆரவாரம் புரிந்துவந்த ஜஸ்டிஸ் கட்சியை வகுப்புவாத நச்சுக் கருத்தினர் என்று அன்று வரை எள்ளி நகையாடி வந்த இவர்கள் உள்ளம் இச் சேதி கேட்டதும் இவர்களையே எள்ளி நகையாடத் தொடங்கிற்று. ஆம்! முதன் முதலாக, காங்கிரசில் பார்ப்பனர்—அல்லாதார் என்ற வேற்றுமை வித்து ஊன்றப்பட்டது வ. வே. சு. வின் குருகுல அமைப்பால — அது நடத்தப்பட்ட முறையால் — அதனால் எழுந்த புகைச்சலால்—புகைச்சல் தமிழரிடையே கிளப்பிய மனக் கொதிப்பால்!

சில நாள் பொறுத்து, டாக்டர் டி. எஸ். எஸ். இராசன் வீட்டில் மாகாண காங்கிரஸ் கமிட்டி கூடிய போது, முன்னர் கமிட்டியால் ஒப்புக்கொண்டு நிறைவேற்றப் பட்ட தீர்மானப்படி 10,000 ரூபா நன்கொடை தர வேண்டியதில் ரூபாய் 5,000 கொடுக்கப்பட்டது போக மிச்சப் பணம் இன்னும் தரப்பட வில்லை என்று வ. வே. சு. ஐயரின் நண்பரான ஓர் ஆரியர் புகார் செய்தார். உடனே பெரியார், வெகுண்டெழுந்து, முன் வாங்கிக்கொண்ட 5,000 ரூபாயே முறை தவறுதலாகவும், தன் விருப்பத்திற்கு மாறாகவும், தனக்குத் தெரியாமலும், நேர்மையற்ற வழியில் வாங்கப்பட்டதென்பதை எடுத்துரைத்தார்.

"அய்யர் குருகுலத்தில் பிராமணர்க்கு உயர்வும் அல்லாதார்க்குத் தாழ்வும் காட்டப்படுவதாக ஏரானமான தோழர்கள் எனக்கும் கடிதம் எழுதி உள்ளனர், என் தமிழ்நாடு இதழில் வெளியிட" என்று உடனே குறிப்பிட்டார் டாக்டர் வரதராசலு நாயுடு. ஓமந்தூர் ரெட்டியார் எழுந்து, சாப்பாட்டில் மட்டுமல்ல, படிப்பு சொல்வதிலும் வேறுபாடு உள்ளது; பார்ப்பனருக்கு சமஸ்கிருத கல்வியும் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ்க் கல்வியும் மட்டும்தான் கற்பிக்கப் படுகின்றன என்று கூறினார். குருகுலத்தில் ஆசிரியராய் உள்ள மற்றொருவர் எழுந்து தமிழ்ப் பிள்ளைகள் வேத சுலோகங்களைச் சொல்லக் கூடாது என்பதாக ஒரு தடை இருப்பதாகவும் குறிப்பிட்டார், இவற்றை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வ. வே. சு. ஐயர் வைதீகர்கள் உள்ள இடத்தில் நான் என்ன செய்வது என்பதாகச் சமாதானம் சொன்னாரே தவிர இப்படியெல்லாம் இல்லை என்பதை மறுத்துரைக்கவில்லை என்பதையும், ஆச்சாரியாரும், டாக்டர் ராஜனும் இந்தப் பிரச்சினையிலும் வ. வே. சு. பக்கமே நிற்பதையும்,

சதிச் செயல்கள் சாய்ந்தன—நீதியும் நேர்மையும் நிலைத்தது!

கண்ட பெரியார் "இனம் இனத்தோடு" என்பது இதுதான் போலும் என்பதை நன்குணர்ந்து கொண்டு, திரு. வி. க. டாக்டர் நாயுடு இருவரிடமும் கலந்து பேசிக் கொண்டு, இந்த மனுநீதி குருகுலத்தை ஒழித்தே தீர்வது என்ற திட்டமான முடிவுக்கு வந்தார். திரு. வி. க. "நவசக்தி"யிலும் டாக்டர் நாயுடு "தமிழ் நாட்"டிலும் குருகுலத்தைக் கண்டித்தனர். பெரியாரும் நாயுடுவும் தமிழகத்தைச் சுற்றிச் சுற்றி வலம் வந்து குருகுலத்திற்கு இருந்துவந்த ஆதரவைக் குலைத்தனர். **தேசிய குருகுலத்திற்குப் பணம் தருவது தேசிய பாவம்** என்று டாக்டர் நாயுடு முழங்கினார். குருகுலம் ஒழிந்தது. ஆனால் அது தமிழ்நாட்டு அரசியலில் மூட்டிவிட்ட ஆரிய திராவிட வேற்றுமைத் தீ ஒழியவில்லை — வளர்ந்தது. மேலும் மேலும் வளர்ந்தது. வளர்ந்து வளர்ந்து, பெரிய பெரிய அநீதிகளையெல்லாம் சுட்டுப் பொசுக்கிற்று—பொசுக்குகிறது இன்றும்.

* * *

1924ல் திருச்சியில் கூடிய தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், பெரியார், காங்கிரஸ் செயலாளராகவும் கொஞ்ச நாள் அதன் இடைக்காலத் தலைவராகவும் இருந்து செய்த வேலையைப் பாராட்டி ஓர் தீர்மானம் செய்யப்பட்டு, அந்த ஆண்டு திருவண்ணாமலையில் கூடும் மாகாண காங்கிரசுக்குத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இத் தீர்மானம் நிறைவேறியது கண்டு மனம் குமுறிய வ. வே. சு. ஐயர் பெரியார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தார் — அப்போதே, அதே இடத்தில்! அது கண்ட திரு. வி. க. "பாழும் பார்ப்பனர்—அல்லாதார் என்ற உணர்ச்சியைத் தமிழ்நாடு காங்கிரசில் வ. வே. சு. புகுத்தி விட்டமை கண்டு வருந்துகிறேன். எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிற்பாடு, இன்றுதான் ஒரு பார்ப்பனரல்லாதார் மாகாணக் காங்கிரஸ் தலைவரானார். அவர் பண்புகளைப் பாராட்டிப் பேசிய பத்து விநாடிகளுக்குள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது தவறு" என்று இடித்துரைத்தார். நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றது. ஆனால் பிராமணர் — அல்லாதார் உணர்ச்சி வலுத்தது.

* * *

1925ல் டாக்டர் வரதராசலு நாயுடு தமிழ் மாகாண காங்கிரஸ் தலைவர். அவர் ஒரு தமிழர் என்ற காரணத்தை உள்ளத்திற் கொண்டு அவர் மீது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப் பட்டது ஆரியரால். டாக்டர் டி. எஸ். எஸ். இராசன், சி. ஆர். இருவரும் அதை அதரித்தனர். ஆனால் பெரியார் அவர்கள் உடனே அதை எதிர்த்துப் பேசித் தோற்கடித்தார். பிறகு டாக்டர் நாயுடு மீது நம்பிக்கை இருப்பதாக ஒரு தீர்மானம் பெரியாரால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இந்த இரண்டு தீர்மானங்களிலும் ஆரிய உறுப்பினர்கள் அனைவரும் ஒரு பக்கமாகவும், திராவிட உறுப்பினர்கள் அனைவரும் ஒரு பக்கமுமாக வாக்களித்தனர்.

அதோடு வ. வே. சு. குருகுலத்தைக் கண்டித்தும், அங்கு காட்டப்படும் சாதி வேறுபாடு தொலைய வேண்டுமென்பதை வலியுறுத்தியும், தீண்டாமையோடு சாதிப் பாகுபாடும் ஒழியவேண்டும் என்று வற்புறுத்தியும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. உடனே சி. ஆர், டாக்டர் ராஜன், டாக்டர் சாமிநாத சாஸ்திரி, கே. சந்தானம் என். எஸ். வரதாச்சாரி முதலிய பதின்மர்—பதின்மரும் ஒரே இனத்தவர்—தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலிருந்தே ராஜினாமா செய்துவிட்டு வெளியேறினர்.

காங்கிரசில் நிகழ்ந்த ஆரிய — திராவிடப் போரின் மற்றுமோர் அத்தியாயம் இது.

* * *

இந்து அறநிலையப் பாதுகாப்பு மசோதா பனகால் அரசரால்—ஜஸ்டிஸ் அமைச்சர் குழுவினால்—கொண்டு வரப்பட்டது ஏறத்தாழ இதே காலத்தில். "இதனால் மதத்திற்கு ஆபத்து! ஆண்டவனுக்கு ஆபத்து!" என்று அபயக் குரல் எழுப்பினர் ஆரியர் அனைவரும்—காங்கிரஸ் பிராமணர் உட்பட. மசோதா ஜஸ்டிஸ் கட்சியினரால் கொண்டு வரப்படுகிறது என்றாலும் இதைக் கண்ட பெரியார், கட்சி

வேற்றுமை பாராட்டா
மக்கள் நன்மைக்கான இ
தாவை அனைவரும் ஆதரிக்
டுமென்று அறிக்கை வி
டாக்டர் நாயுடுவும், திரு.
இதனை ஆதரித்தனர். பா
அனைவரும் கட்சி வே
யின்றி மசோதாவை எதி
அல்லாதார் அனைவரும் அ
கட்சித் திரைகளைக்
கொண்டு அதனை ஆதரிக்
நிலை ஏற்பட்டது. கா
நிகழ்ந்த பிராமணர் — அ
போராட்டத்தின் மற்றொ
இது.

* *

காங்கிரசில் தமிழர்க
பார்ப்பனர்கள் மீது வெ
மாக வளர்ந்து வரும் அதிரு
அடியோடு ஒழிக்க வேண்டு
அந்தந்த வகுப்புகளின்
கேற்ப அவரவர்கட்கு
தரப்பட வேண்டும் —
வகுப்புவாரி பிரதிநிதித்து
காங்கிரஸ் அதிகாரபூர்வமாக
கொள்ளவேண்டும்
பெரியார் இந்த நிகழ்ச்சி
பின்பு வற்புறுத்தலானார்.

1925ல் காஞ்சீபுரத்தில்
மாகாண காங்கிரஸ், க
பெரியார் வகுப்புவாரித்
னத்தை அங்குக் கொண்டு
அது பல்வேறு சூழ்ச்சிகளின்
வாக ஒதுக்கப் பட்டது.

உடனே பெரியார், மா
எழுந்து, "இன்று காங்கிர
சொல்லை ஏற்க மறுக்கிறது.
என்றேனும் ஓர் நாள் வகுப்பு
பிரதிநிதித்வமே வகுப்புப்
தீர்ப்பதற்குரிய சரியான
என்பதை அது உணரவே
றது. பார்ப்பனியம் காங்கி
வெளியிலும் விளைத்துவரும்
மைகளை நாட்டு மக்களுக்கு
விளக்குவதே இனி என்
என்று சூளுரைத்துவிட்டு
யேறினார்.

அவர் 1925ல் உரைத்த
நாளும் வந்தது—1947
20 ல்.

இடையே உள்ள கால
22 ஆண்டுகள்! ஆம், 22
கள் தேவைப்பட்டது
உலவுவதற்கு!

* *

(5-ம் பக்கம் பார்

(...ம பக்கத் தொடர்ச்சி)
...ல் உறைபவர்கள் தானே.
...ாவிற்கும் குமரவேளிற்கும்
...் ஏற்பட்டுவிட்டது. கமலா!
...க்குக் கோபம் வருகின்றதா?
...ம் ஒரு பொட்டல் வெளி.
...யிர் விளையும் நன்செய் நில
... மக்கள் வாழ்வு செழிக்க
...டுமென்பதில் கவலையற்றது.
... செய்யும் செய்கை யாவற்
... குற்றமே காணும். ஆண்
...து ஆண்டிற்குப் பின்னும்
...று வயதுச் சிறுமியை ஐந்து
...து ஆறுவது தடவையாக
...ம் மணந்துகொள்ள இடங்
...ன்றது. பெண்களும் ஆறறிவு
...த்த உயர்திணையைச் சேர்ந்த
...் என்பதை ஏனோ மறந்து
...ன்றது. கமலா, குமரவேளை
... உலகம் தூற்றியது. அவ
...் படித்த நண்பர்கள் கூட
...ன விலக்கினர்.

...னுடைய மாமனுக்கும் தன்
...் இருக்கும்போது இவனைப்
...க் கவலைப்பட நேரமேது?
...சை எழுதிவிட்டு யாரும் அறி
...் வீட்டைவிட்டு வெளியேறி
... அதன் பிறகு அவனைப்பற்றி
...கவலும் கிட்டவில்லை.

... லலிதாவையும் கூட அழைத்
...கொண்டுதானே சென்றான்?

... இல்லை. கல்லூரியிலே படித்
... பொருளீட்ட வழி தெரி
...வன். பரந்த உலகிலே திரிந்
...வன். லலிதாவையும் அழைத்
...ாண்டு எங்கு செல்வான்?
...நாடு சென்றானென்றும் லலி
...கு மாதாமாதம் பணம்
...புகின்றான் என்றும் வதந்தி
... பேசிக் கொண்டார்கள்.
... உண்மை அறியக் கூட
... இதற்கிடையே ஒரு சம்ப
...கழ்ந்தது. லலிதாவின் அழ
...நானும் சிறு வயது முதற்
...டே ஆசைப்பட்டதுண்டு.
...மன என்னினேன் அவளை.
...விருப்பத்தைத் தெரிவித்தால்
...் இணங்கிவிடுவாள் என்று
...னன். நான் காமாந்தகாரன்.

...ன்சா வாழ்வையும் கெடுக்க
...ா?

...ல்லை கமலா. நான் ஒரு
...ன்றால், அவள் குற்றமா
...ன்றொரு நாள் லலிதாவின்
...ாவிலுக்குச் சென்றிருந்த சமயம் அவள் வீடு சென்றேன். 'மலர்ந்த மலர் மீது வண்டுமொய்க்கும்போது வண்டை மலர் தடுக்குமோ?' என்று அவளிடம் நயமாக மெல்ல உரைத்தேன். கமலா! அவள் திறமையைப் பார்! 'ஈக்கள் மதுவில் வீழ்ந்து இறக்கும்போதும், ஈக்களை மது தடுப்பதில்லை' என்று பதில் கூறினாள். என்னைக் கேவலமாக மதித்தாள் என்று ஆத்திரப்பட்டேன். 'உன் எண்ணம் ஈடேறாது, குமரவேளை உன் உரிமைப் பொருளாக நீ கனவுகாண்கின்றாய். உன் கனவை இடையிலே நான் கலைத்தே தீருவேன்' என்று சுடுசொல் வீசிவிட்டுத் திரும்பிவந்து விட்டேன். கமலா, இதற்குப் பின் நான் நடந்துகொண்ட விதம் என் வாழ்வின் வழிகாட்டியாக இருந்தாலும், துன்பம் நெஞ்சைவிட்டு அகலவில்லை. மார்கழி மாதம், அருகாமையிலுள்ள கிராமத்திற்குச் சென்று ஆற்றங்கரை வழியே வந்துகொண்டிருந்தேன். பகல் முழுதும் காய்ந்த வெய்யிலின் வெப்பம் இரவில் மழை பெய்யும் என்பதை உணர்த்தியது. மாலையும் வந்தது. பொன்னிறக் கதிர்களை வீசவேண்டிய ஞாயிற்றை மேகக் கூட்டம் கவ்விக் கொண்டது. காற்று சிறிது நேரத்திற்கெல்லாம் புயலென வீச ஆரம்பித்தது. படுகைகளில் வேலை செய்து கொண்டிருந்தவர்களும் விரைந்து வீடு நோக்கிச் சென்றுவிட்டனர். கடைசியாக, இந்தப் பரபரப்பிலும் மெதுவாக எனக்குமுன் ஒருவன் நடந்து செல்வதைக் கண்டேன். வாழ்வின் வளம் குன்றியவன் போலும் என்று எண்ணினேன். குமரவேளாக இருக்கலாம் என்று எனக்கோர் ஐயம் தோன்றியது. அவன் அறியாமல் அவன் பின்னர் தொடர்ந்து சென்றேன். ஆற்றுத் துறையிலும் ஒருவரும் காணப்படவில்லை. சற்று தூரத்தில் ஒரு பெண் விரைந்து வருவதைப் பார்த்தேன். அவன் அவளைக் கண்டு யாரோ என ஐயுற்று மறைந்து கொண்டான். அப்பெண் விரைந்து சென்று நீர்மொண்டு திரும்பும்போது அவன் அவளை நோக்கி ஓடினான். இவன் திருடன்—குமரவேள் அல்ல-அப்பெண்ணை வழிமறைக்கின்றான் என எண்ணி மிக விரைவாக ஓடிச் சென்று என் சிறு கத்தியால் அவனைக் குத்திவிட்டேன். கமலா அவன் குமரவேள் தான். அவளும் லலிதாவே. குமரவேள் மூர்ச்சையாகி விழுந்தான். என் உடல் நடுங்கியது. நான் கொலைபாவி என்ற குற்றத்திற்கு ஆளாகவேண்டும்.

க: பாவிப்பயல். குமரவேள் இறந்துவிட்டானு.

கு: கமலா. குமரவேள் மட்டுமல்ல. லலிதாவையும் ஆற்றில் தள்ளிவிட்டேன். அவள் உயிரோடிருந்தால் எனக்கு ஆபத்தல்லவா? கமலா! அதோ வானைப் பார். விண்மீன் ஒன்று நிலைபெயர்ந்து கீழே விழுகின்றது. மனிதனும் அதைப் போலத்தானே உதிர்ந்து போகின்றான்.

க: இதையெல்லாம் பார்த்துத். தானே சுந்தரம் பிள்ளை, 'புருடரே புலையர், நிலையிலாப் பதடிகள், கல்வியில் கசடர் ...... கருவுறுங் குழவி மெய்மென்றிட நன்றெனக் கொன்று தின்றிடுவர்' என்றெல்லாம் எழுதிவைத்தார்.

கு: கமலா. என் பொருட்டு ஆண்கள் வர்க்கத்தையே குறை கூறாதே. கமலா மயக்கமாக இருக்கின்றதே—ஏன்?

க: உங்கள் நோய் உங்களை வாட்டுகின்றது. பெண்கொலை பாபமல்லவா?

கு: கமலா. பெண்கள் நல்... வ... வ

க: என்ன பேசமுடியவில்லையா! ஐயையோ உடலெல்லாம் சில்லிட்டுப் போய்விட்டதே! அந்தோ! நானும் ஓர் விதவையா!

போர்வாள்

திராவிடர் வார வெளியீடு

	உள் நாடு			வெளிநாடு		
தனி இதழ் ரூ.	0	1	6	0	2	0
ஆண்டு 1-க்கு	5	0	0	6	8	0
6 மாதங்கட்கு	2	8	0	3	4	0

விபரங்களுக்கு:

போர் வாள்,
பவழக்காரத் தெரு, சென்னை.



[சென்ற இதழின் தொடர்ச்சி]

2

சாமிநாதனுக்கு மணமாகும் தினத்திற்கு முந்திய நாள் வீடு ஓரே கலகலப்பாய் விளங்கியது. மணப் பெண்ணிற்குத் தங்கை ஒருத்தி-ஒன்பது வயதிருக்கும். 'மூக்கும் விழியுமா இருக்கு' என்பார்களே பிராமணத் தமிழில்—அந்த ரகத்தைச் சேர்ந்தவள். அவளைப் பிடித்து இழுத்துக் கொண்டே, கௌரி, நானும் சாமிநாதனும் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

" அண்ணா, உன் மைத்துனிக்கு நன்றாய்ப் பாடவும் அபிநயம் பிடிக்கவும் வருமாம்; கொஞ்சம் ஆடச் சொல்லேன் " என்று கொஞ்சினாள்.

சாமிநாதன் அந்தச் சிறுமியை எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் அவள் நாட்டியமாட மறுத்துவிட்டாள். எங்களுக்கெல்லாம் ஏனோ கேட்டோம் என்றாகிவிட்டது. அந்த சமயத்தில் சாமிநாதனின் மாமனார் வந்து சேர்ந்தார்.

"ஏ குட்டி! ஆடேண்டி செத்த. அவா என்னமோ ரொம்ப வேண்டி வேண்டி கேட்கறா, நீ என்னமோ பெரிய பிகு பண்ணறே!" என்று ஒரு அதட்டு அதட்டினார்.

கேட்டதும் நடுநடுங்கிப்போய் விட்டாள் அந்தச் சிறுமி. கண்களிலிருந்து நீர் பெருகிற்று. "அம்மா அழாதே! ஆட முடியாவிட்டால் போகிறது" என்றேன் நான். இல்லை. இல்லை. ஆடுகிறேன் என்று சொல்லிவிட்டு, "கண்டவுடன் என் உள்ளம் கொள்ளை கொண்ட கள்வா" என்ற பாட்டைப் பாடிக்கொண்டே ஆட ஆரம்பித்தாள் அவள்.

குரல் பரவாயில்லை. அபிநயமும் மோசம் என்று சொல்லிவிட முடியாது. அதற்கு மேலும் அந்தச் சின்னஞ் சிறு கிள்ளையிடம் எதிர் பார்க்கக கூடாது என்று கூட எண்ணினேன். ஏனென்றால் வயதுக்குத் தகுந்த "பாவம்" தானே வெளிவரும். ஒன்பது வயது பெண்ணிற்குக் காதலை வெளியிடும் கருத்துக் கொண்ட பாடலுக்குத் தகுந்த 'பாவத்தை' எப்படிக் காட்ட முடியும்?

அந்தப் பெண்ணைக் குறை சொல்வதில்பயனில்லை. ஒன்பது வயது பெண்ணிற்கு எந்தெந்தப் பாடலைக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதை உணராது, பொறுப்பின்றி அந்தப் பாடலை அவளுக்குக் கற்பித்த ஆசிரியனைக் குறைகூற வேண்டுமேயன்றி அவளைக் கூறக்கூடாது.

பாட்டும் அபிநயமும் முடிந்ததும் சாமிநாதன் அந்தப் பெண்ணைப் பார்த்து, குறும்பாக,

"ஏண்டி, கொள்ளை கொண்டது நானா அல்லது அவனாடி!" என்று என்னைச் சுட்டிக் ...பித்தான். நான் கௌ... பார்த்தேன்.

இதற்குள் அந்தப் ... கௌரியின் பிடியில் ... வழுவி ஓடிவிட்டாள். அ... கண்டு என்னை யறியாமல ... சிரித்துவிட்டேன்.

கௌரியும் நானும், ... கீதம் இசைத்துக்கொண்டு ...டன் கை பிணைத்துக்கொ... காதற் சுவைதனிலே இ... தேனைப் பிசைந்தெடுத்து அ... அள்ளிவிழுங்கியவண்ணம் ...க்கைப் பாதையில் செல்ல... கிறோம் என்பது எங்கள் ...ருடைய ஒவ்வொரு அ...லும் செயலிலும் என்ன...லும் நிழலாடத் தொட... என்பதை நான் அப்போது தெள்ளத் தெளிய உண... கொண்டேன். இல்லாவிட்... அந்தச் சிறுமி, "கண்ட... என் உள்ளம் கொ... கொண்ட கள்வா" என்... பாடக் கேட்டபோது ... அடிக்கடி என் பக்கம் திரு...தும், நானும் என்னை ... மலே அதே சமயங்களில் ... பக்கம் நோக்கியதும் ... நிகழ்ந்திருக்க முடியும்? ... என்னும் வசீகர சக்தி ... இருவரையும் இணைத்... இல்லை என்றால் அவள் ... என் கண்களுடன் பேசிய ... வார்த்தைகளுக்குத்தான் ... பொருள்?

"பாயும் ஒளி நீ என... பார்க்கும் விழி நான் உன... என்று கௌரி பாட... "தோயும் மது நீ என... தோன்று சுவை நான் உன... என்று நான் பதில் உ...மில்லை. உன் அதர... துடிப்பு என் உளளத்தை... துடிக்கவைக்கிறது என்று...

(4-ம் பக்கம் பார்க்...